# கோவிட்-19 தொற்று பரவலின்போது ப்ராம்ப்ட்டன் நகரில் 2020 ஆம் ஆண்டிற்கான நன்றி நவிலல்

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 6, 2020) – இந்த ஆண்டின் நன்றி நவிலல் அக்டோபர் 12 ஆம் தேதி திங்கட்கிழமையன்று நிகழ்கிறது.

தீயணைப்பு மற்றும் அவசரகாலச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், சட்ட அமலாக்கம், சாலைப்பணிகள், POA நீதிமன்றங்கள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகியவை உள்ளிட்ட மிக முக்கியமான சேவைகள், நமது சமூகத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக, வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

ஏதேனும் விசாரிப்புக்களுக்கு குடியிருப்பு வாசிகள் 311 அல்லது 905.874.2000 (ப்ராம்ப்ட்டன் நகருக்கு வெளியில்) என்ற எண்களை அழைக்கலாம், Brampton 311 செயலியை [ஆப் ஸ்டோர்(App Store) அல்லது கூகிள் ப்ளே (Google Play) யில் கிடைக்கும்] உபயோகிக்கலாம்; www.311brampton.ca எனும் வலைத்தளத்திற்கு வருகை தரலாம் அல்லது 311@brampton.ca என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். ப்ராம்ப்ட்டன் நகரம் அல்லது பீல் பிராந்தியம் தொடர்பான விஷயங்களுக்கு 24/7 என்ற முறையில் நாங்கள் செயல்படுகிறோம்; இதில் கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலின் பேரிலான முகக் கவசம் அணிதல், அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்கட்டிடங்களை மீண்டும் திறத்தல் மற்றும் அவற்றில் முன் பதிவின் பேரில் மட்டுமே நுழைதல் ஆகிய விஷயங்கள் அடங்கும். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/covid19

**பட்டாசு கொளுத்துவதில் பாதுகாப்பு**

நன்றி நவிலல் தினம் அன்று எந்த விதமான பட்டாசு வாண வேடிக்கைகளையும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நடத்துவதில்லை என்பதுடன், தனி நபர்களும் பட்டாசு வெடிப்பது/கொளுத்துவது அனுமதிக்கப்படுவதில்லை

ஒரு ஆண்டில் ப்ராம்ப்ட்டன் நகரில் தனி நபர் பட்டாசு வெடிப்பது/கொளுத்துவது குறிப்பிட்ட நான்கு நாட்களில் அனுமதிக்கப்படுகின்றது. ஆனால் நன்றி நவிலல் தினம் என்பது அதில் ஒன்று கிடையாது. மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/bylaws.

**ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து**

நன்றி நவிலல் தினத்தில்  ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையானது, ஞாயிற்றுக்கிழமை/விடுமுறை நாளுக்கான அட்டவணைப்படி இயங்கும், அதே சமயத்தில் சில வழித்தடங்கள் ரத்து செய்யப்படும். பயணம் செய்யும் முன்னதாக கால அட்டவணையுடன் சரிபார்த்துக் கொள்ளவும்.

தொடர்புக்கான மையமானது காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்தே இருக்கும்; இந்த நேரத்தில் உதவிகளும் கிடைக்கும்; அழைப்பதற்கான எண் 905 874 2999.

வாடிக்கையாளர் சேவை மையங்கள் மூடப்பட்டிருக்கும் மற்றும்  ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனையங்கள் இருக்கும் பகுதி காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை செயல்படும். ட்ரினிட்டி காமன் டெர்மினல் மூடப்பட்டே இருக்கும்.

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத்  தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.  ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே  ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பேருந்துகள் 24 மணிக்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்

பேருந்து பயணிகள் முகக் கவசம் அணிந்திருக்கும்போதும் கூட,  பேருந்து முனையங்கள், மற்றும் பேருந்து நிறுத்தங்களில் கூடிய மட்டில் உடல்ரீதியான இடைவெளி விடுவதைத் தொடர்ந்து பேணி வருமாறு நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக தங்கள் சொந்த  கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இருமும்போதும், தும்மும்போதும் தங்கள் முழங்கையில் முகம் புதைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உங்களுக்கு உடல் நலமில்லாது இருந்தால், பேருந்தில் பயணம் செய்வதைத் தவிர்க்கவும்; அருகாமையில் இருக்கின்ற கோவிட்-19 மதிப்பீட்டு மையத்தில் சோதனை செய்துகொண்டு, பொது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், பேருந்து பயணிகள், பேருந்துகளிலும் மற்றும் பேருந்து முனையங்களிலும் இருக்கும்போது, உங்கள் மூக்கு, வாய் மற்றும் தாடையை மறைத்தபடி, மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிய நினைவூட்டப்படுகிறார்கள். ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்காக, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால மேலாண்மை அலுவலகம் ஆகிய தனது கூட்டு அமைப்புகளுடன் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நெருங்கி பணியாற்றி வருகிறது.

வழக்கப்படியான புதுத் தகவல்களுக்கு www.brampton.ca/covid19 எனும் வலைத்தளத்திற்கு வருகை புரியவும் மற்றும்சேவைகள் பற்றிய புதிய தகவல்களுக்கு www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது @bramptontransit ஐ டுவிட்டரில் பின்பற்றவும். கேள்விகள் இருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் தொடர்பு மையத்தை 905.874.2999.இல் தொடர்பு கொள்ளவும்

**ப்ராம்ப்ட்டன் நகர பொழுதுபோக்கு**

பொழுதுபோக்கு மையங்கள் நன்றி நவிலல் தினம் அன்று மூடப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு முன்பதிவின் பேரில் வருகை புரிய அக்டோபர் 13 ஆம் தேதி மீண்டும் திறக்கப்படும். அனைத்து பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் பற்றிய மேலும் தகவல்களுக்கும், மற்றும் ஒரு இடத்தை எப்படி முன்பதிவு செய்து கொள்வது என அறியவும் வருகை தரவும்: www.brampton.ca/recreation.

ஒரு ஆன்லைன் பயிற்சிவகுப்பை பின்பற்றுவதன் மூலம் வீட்டில் இருந்தபடியே செயல்பாட்டுடனும் ஈடுபாட்டுடனும் தொடர்ந்து இருங்கள். உங்கள் முழு உடல் தகுதியை கச்சிதமாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்; காகிதப்பூக்கள், காகித பொம்மைகள் செய்து பாருங்கள்; படங்கள் வரைவதில் இன்னும் பலவற்றில் ! செயல்பாடுகளின் பல ரகங்களை www.brampton.ca/recreation எனும் வலைத்தளத்தில் அணுகலாம்.

**ப்ராம்ப்ட்டன் நகர பூங்காக்களில் இலையுதிர்கால குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தல்**

இலையுதிர்கால குப்பைகளை அகற்றி சுத்தம் செய்யும் பணியின் ஒரு அங்கமாக நமது நகரில் – உங்கள் வீட்டைச் சுற்றி, உள்ளூர் பூங்காக்களில், உங்கள் வியாபார ஸ்தலங்களுக்கு முன்னால் - இருக்கின்ற குப்பைகளை அகற்றி சுத்தம் செய்ய சில நிமிடங்கள் செலவு செய்யுங்கள். www.brampton.ca/cleanup இல் ஆன்லைனில் பதிவு செய்துகொள்வதன் மூலம் சுத்தம் செய்வதற்கான உபகரணத்தொகுப்பினை நீங்கள் பெறலாம். ஆன் லைனில் எங்களுடைய "பீ லைக் தி பில் (Be like Bill)" பிரச்சாரத்தை கண்டிப்பாக பார்த்து, ப்ராம்ப்ட்டன் நகரவாசி ஒருவர் இதற்கான வழியை எப்படி காட்டுகிறார் மற்றும் பசுமை தாக்கம் ஒன்றை எப்படி செய்கிறார் என்று தெரிந்துகொள்ளுங்கள். .

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

ப்ராம்ப்ட்டன் நூலக கிளைகள் அனைத்தும் தற்போது மூடப்பட்டுள்ளன. நூலகங்களில் போகிற போக்கில் ஜன்னலோரமாக பெற்றுக்கொள்ளும் வசதி அக்டோபர் 12 ஆம் தேதி கிடைக்காது. தங்களுடைய

ப்ராம்ப்ட்டன் நூலக அட்டை மற்றும் PIN எண்ணை உபயோகித்து இ-புத்தகங்கள், இ-ஆடியோபுத்தகங்கள், கேளிக்கை ஒளிபரப்பு, ஆன்லைன் கற்றல் மற்றும் பலவற்றை டிஜிட்டல் நூலகத்தில் செலவு ஏதுமில்லாமல் தேடிப்பெறுங்கள். உங்கள் கணக்கை உபயோகித்து ஒரு ஆன்லைன் நூலக அட்டை பெற இங்கு க்ளிக் செய்யவும் அல்லது உதவி பெறவும். அனைத்து வயதினருக்குமான மெய்நிகர் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் மற்றும், ப்ராம்ப்ட்டன் நூலகத்தின் மின்னஞ்சல் முகவரி மூலமாக புது தகவல்கள் பெற, பதிவு செய்து இணைப்பிலிருங்கள். Facebook, Twitter மற்றும் Instagram ஐ @bramptonlibrary இல் பின் தொடர்ந்து ப்ராம்ப்ட்டன் நூலகத்துடன் தொடர்பிலிருக்கவும்.

**ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவைகள்**

ப்ராம்ப்ட்டன் விலங்குகள் காப்பகம் நன்றி நவிலல் தினம் அன்று மூடப்பட்டிருக்கும்.

சாலைகளில் விலங்குகள் கட்டுப்பாடு என்பது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையும், சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 6:30 மணி வரையும் அமலில் இருக்கும்; இது பின் வரும் அழைப்புக்களுக்கு மட்டுமே செவிசாய்க்கப்படும்:

- நோயுற்ற/காயப்பட்ட/ஆக்ரோஷமான வீட்டு மற்றும் காட்டு விலங்குகளை பிடித்து செல்லுதல்
- ஆக்ரோஷமான விலங்கு
- சுற்றித்திரியும் நாய்
- நாய்க்கடி விசாரணை
- அடைபட்ட தெருநாயைப் பிடித்து செல்லுதல்
- இறந்து கிடக்கும் விலங்கினை அகற்றுதல்

இந்த நேரங்களுக்கு அப்பால், அவசர கால அழைப்புக்களுக்கு மட்டுமே விலங்கு கட்டுப்பாட்டு அமைப்பினர் செவிசாய்ப்பார்கள்.

**நன்றி நவிலல் வார இறுதிக்கான பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் நினைவூட்டல்கள்**

**உங்கள் சமூக வட்டத்தை சுருக்கிக்கொள்ளுங்கள்**

கோவிட்-19 தொற்று பரவக்கூடிய ஆபத்தைக் குறைப்பதற்காக, நாம் அனைவரும் பிறருடனான நமது தொடர்புகளைக் குறைப்பது அவசியமாகும். கூட்டம் கூடும் நபர்களின் எண்ணிக்கையை குறைத்துக்கொள்ளுமாறும், உங்கள் வீட்டார் மற்றும் உங்களுக்கான அத்தியாவசியமான பராமரிப்பு அளிப்பவர்களுடன் உங்களுடைய சமூகவட்டத்தை சுருக்கிக் கொள்ள வேண்டும் என்றும் பீல் பப்ளிக் அமைப்பு பரிந்துரைக்கிறது.

**பரவிவிடக்கூடிய ஆபத்தைக் குறைக்கவும்**

நன்றி நவிலல் இந்த ஆண்டில் வித்தியாசமாகவே தோன்றும். நாம் ஒன்று கூடி நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில் நமக்குப் பிரியமானவர்களை கோவிட்-19 ஆபத்திலிருந்து பாதுகாக்கின்ற வாய்ப்புக்களை எடுத்துக்கொள்வது முக்கியமாகும். தொற்று பரவிவிடக்கூடிய ஆபத்தினைக் குறைப்பதற்காக உடல்ரீதியான தூரமாக குறைந்தது இரண்டு மீட்டர்கள் தள்ளியே இருக்கவும். உடல்ரீதியான விலகலைப் பேணுவது சாத்தியமில்லாத இடங்களில் முகக் கவசம் அணிவதை உறுதி செய்யுங்கள்.

**கூட்டம் கூடுவீர்களேயானால், குறைவானவர்களே அதிகம்தான்**

விருந்துபசரிப்பாளர்கள் தங்கள் வீட்டார் மற்றும் அத்தியாவசியமான பராமரிப்பு அளிப்பாளர்களுடன் மட்டுமே கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். தொற்று பரவல் காலத்தில், குறைவானவர்களே அதிகம்பேர்தான். அப்படியும் உங்கள் வீட்டாரைத் தாண்டிய நபர்களுடன் தொடர்பு கொண்டுதான் ஆகவேண்டுமானால், அவர்களின் எண்ணிக்கையைக் குறையுங்கள், அவர்களுடன் செலவிடும் நேரத்தைக் குறையுங்கள், நன்கு விலகியே இருங்கள், முகக் கவசம் அணியுங்கள் மற்றும் கைகளைக் கழுவுங்கள். உடல்நலமில்லை என்றால் நேரடியாக செல்லாமல் மெய்நிகராக சந்தியுங்கள், சோதனை செய்துகொள்ளுங்கள் மற்றும் வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள்

**உங்களுக்கு உடல்நலமில்லை என்றால் கூட்டத்தில் சேரவேண்டாம்**

நன்றிநவிலல் கூட்டத்திற்கு வருமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, ஆனால் உங்களுக்கு உடல் நலமில்லையா? பீல் பகுதியில் கோவிட்-19 தொடர்ந்து ஆபத்தை உண்டாக்குவதால், நாம் கூடும்போது, மெய்நிகராக இணைவதை தேர்ந்தெடுங்கள், சுயமாக வீட்டில் இருந்தபடி தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள், ஆரோக்கியமாக இருக்க, சோதனையும் செய்துகொள்ளுங்கள்

இந்த நன்றி நவிலல் வார இறுதியில் உங்களையும் உங்களுக்குப் பிரியமானவர்களையும் காத்துக்கொள்வது எப்படி என்பதற்கான மேலும் தகவல்களுக்கு வருகைதரவும்: peelregion.ca/coronavirus/ அல்லது பீல் பகுதி அமைப்பை Twitter, Facebook, and Instagram.இல் பின்பற்றவும்

-30-

**ப்ராம்ப்ட்டன் நகர ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்l
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் மற்றும் சமூக ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

**பீல் பிராந்திய ஊடக தொடர்பு**
ஆஷ்லீ ஹாக்கின்ஸ்
தகவல்தொடர்பு சிறப்பியலாளர் – பொது சுகாதாரம்
பீல் பிராந்தியம்
416.818.4421 | ashleigh.hawkins@peelregion.ca